சுவாதீன (POSSESSION) அறிவிப்பு (அசையா சொத்துக்களுக்கானது) விதி 8 (1)

2002–ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் படி, கீழே கையொப்பமிட்டுள்ளவர், IIFL ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்னாள் இந்தியா இன்ஃபோலைன் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்) (IIFL HFL) அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், மேற்படி பிரிவு 13(12)–ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002–ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3–ன் கீழும், தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி பின்வரும் கடன்தாரர்கள் மற்றும் இணை கடன்தாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்பினை(DEMAND NOTICE) அனுப்பி அதில் காணும் தொகையை செலுத்துமாறு கோரியிருந்தார். ஆனால், கடன்தாரர் மேற்படி பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால், கடன்தாரர், மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய விதிகள் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை வங்கியின் அதிகாரபூர்வ அலுவலர் தமது சுவாதீனத்தில்(POSSESSION) எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே, கடன்தாரர், மற்றும் முக்கியமாக பொதுமக்களுக்கு இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், மேற்படி சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ, நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது IIFL HFL–க்கு செலுத்த வேண்டிய கடன்பாக்கி மற்றும் வட்டி சேர்த்துச் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

கால அவகாசம் தொடர்பான மேற்படி SARFAESI சட்டம் பிரிவு 13, உட்பிரிவு 8–ன் ஷரத்துகளை கவனத்தில் கொள்ளுமாறு கடன்தாரர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். சொத்தினை விற்பதற்கான அல்லது உரிமை மாற்றுவதற்கான நிர்ணயிக்கப்பட்டுள்ள தேதிக்கு முன்னர் எந்தவொரு நேரத்திலும் கடன்தாரர் IIFL HFL–க்கு செலுத்த வேண்டிய கடன்பாக்கி மற்றும் வட்டி, கட்டணங்கள், ஏற்பட்ட அனைத்து செலவுகள், ஆகியவற்றை சேர்த்து செலுத்திவிட்டால் கடனுக்கு ஈடான சொத்து IIFL HFL–ஆல் விற்கப்பட மாட்டாது உரிமை மாற்றி தரப்பட மாட்டாது. மேலும், கடனுக்கு ஈடான சொத்தினை விற்பதற்கோ, உரிமை மாற்றி தருவதற்கோ IIFL HFL–ஆல் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படமாட்டாது.

கடன்தாரர்(கள்) பெயர் ஒசூர் கிளை	அடமான சொத்து விவரம் (அசையா சொத்து)	மொத்த நிலுவைத் தொகை ரூ	கோரிக்கை அறிவிப்புத் தேதி	சுவாதீன தேதி
திரு. முரளி T, திருமதி. லக்ஷ்மம்மா T, திரு. முருகேசன் T, திரு. பிரசாந்த் T மற்றும் திரு. திம்மராயப்பா M (வாடிக்கையாளர் எண். 840313 & 925373)	சொத்தும் அதன் அனைத்து முக்கியப் பகுதிகளும்:சர்வே எண்.50/1, 1600 சதுர அடி பரப்பளவு, நத்தம் புதிய உட்பிரிவு சர்வே. எண். 375/32 செம்பரசனப்பள்ளி, பஞ்சாயத்து சாலை, ஒசூர், ஒசூர், ஒசூர், 637117, தமிழ்நாடு, 637117, இந்தியா, எல்லைகள்–கிழக்கு : பொதுவான வழி மற்றும் அதே சர்வே எண்ணில் மீதமுள்ள நிலம், மேற்கு: திரு. முனிராஜப்பா மற்றும் பலர் நிலம், வடக்கு: பொதுவான வழி, தெற்கு: சக்கராஜப்பாவின் நிலம்.	வாடிக்கையாளர் எண். 840313க்கு ரூ. 2,96,829/– (ரூபாய் இரண்டு லட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து எண்ணூற்று இருபத்து ஒன்பது மட்டும்) வாடிக்கையாளர் எண். 925373க்கு ரூ.69,058/–(ரூபாய் அறுபத்து ஒன்பதாயிரத்து ஐம்பத்தெட்டு மட்டும்)	15 ஜூலை 2022	06 அக்டோபர் 2022

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்க அதிகாரபூர்வ அலுவலர், கிளை அலுவலகம்: 'ஆதம் சேம்பர்ஸ்' # 11 ரிச்மாண்ட் சாலை பெங்களூரு–560025 அல்லது கார்ப்பரேட் அலுவலகம்: மனை எண். 98, கட்டம் –IV, உத்யோக் விஹார், குர்கான், ஹரியானா.

இடம்:ஒசூர் தேதி:11.10.2022

ஒம்/– அதிகாரபூர்வ அலுவலர், IIFL ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்–க்காக

இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

HINDUJA HOUSING FINANCE

பெருநிறுவன அலுவலகம் : 167-169, 2வது தளம், சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை - 600015

கிளை அலுவலகம் 1: எண். 15/3-B2, 2வது தளம், நரசிம்மன் தெரு, BSNL அலுவலகம் அருகில், தர்மபுரி - 636701

கிளை அலுவலகம் 2: எண்.1/5, சாந்தி பிளாசா, 1-வது தளம், பிருந்தாவன் சாலை, பேர்லேண்ட்ஸ், பொன்னுசாமி கவுண்டர் மண்டபம் எதிரில், சேலம் - 636 004.

தொடர்புக்கு: அதிகாரபூர்வ அதிகாரி: திரு.செந்தில் C.P. (RLM), போன்: 96292 95543 மின்னஞ்சல்: senthil.cp@hindujahousingfinance.com

மின் ஏலம் மற்றும் விற்பனைக்கான பொது அறிவிப்பு (பிற்சேர்க்கை IV A) (விதி 8(6))

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துகளை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002-படி (இனி சட்டம் என்று அழைக்கப்படும்)-ன் கீழ் எண். 167-169, 2வது தளம், சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015 என்ற முகவரியில் உள்ள பெருநிறுவன **கிளை அலுவலகம் 1:** எண். 15/3B2, 2வது தளம், நரசிம்மன் தெரு, BSNL அலுவலகம் அருகில், தர்மபுரி - 636701, **கிளை அலுவலகம் 2:** எண்.1/5, சாந்தி பிளாசா, 1-வது தளம், பிருந்தாவன் சாலை, பேர்லேண்ட்ஸ், பொன்னுசாமி கவுண்டர் மண்டபம் எதிரில், சேலம் - 636 004 என்ற முகவரியில் கிளை அலுவலகம் கொண்டுள்ள இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (HHF)-க்கு அடமானம் செய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் விற்பனை. கீழே குறிப்பிட்டுள்ள கடன் கணக்குகளுக்கான சட்டம் பிரிவு 13(2)-ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை HHF-ன் அதிகாரபூர்வ அதிகாரி சுவாதீனம் எடுத்துக்கொண்டு கீழே குறிப்பிட்டுள்ள கடன் தொகைகளை பெறுவதற்கான **"எங்கு எப்படி உள்ளதோ மற்றும் அங்கு அப்படி அதே நிலையில்"** என்ற அடிப்படையில் அடியிற்கையொப்பமிட்டவரால் www.bankauctions.in என்ற இணையதளம் மூலமாக விற்பனை செய்யப்படும்.

வ.எண்.1: கடன்தாரர்(கள்) / இணைகடன்தாரர் (கள்) / ஜாமீன்தாரர் (கள்) : கடன்தாரர்: 1. திருமதி. புஷ்பா இணைகடன்தாரர் : 2.திரு.பழனி த/பெ. சின்னசாமி, இருவரின் முகவரி: 3/194, கிருஷ்ணாபுரம் அஞ்சல், தர்மபுரி, கிருஷ்ணாபுரம், எம்.ஜி.ஆர் சிலைக்கு பின்புறம், தர்மபுரி - 635202. **கேட்பு அறிவிப்பு தேதி மற்றும் தொகை: 12.09.2020 & ரூ.14,35,320/- அடையாளபூர்வ சுவாதீன தேதி: 16.03.2021, மொத்த நிலுவை தொகை: 31.10.2022 அன்று வரை ரூ.12,68,380/-**

அசையா சொத்துக்களின் விவரங்கள் : தருமபுரி பதிவு மாவட்டம், தருமபுரி இணை 2 துணை பதிவு மாவட்டம், தருமபுரி மாவட்டம், தர்மபுரி தாலுகா, கிருஷ்ணாபுரம் கிராமத்தில், பழைய நத்தம் சர்வே எண். 282/1, நஞ்சை EXT. ஹெக்டேர்3.02.5, நத்தம் புதிய உபபிரிவு சர்வே எண்.688/27-ல் உள்ள நிலத்தின் எல்லைகள் பின் வருமாறு : தெருவிற்கு தெற்கே, திரு.அப்துல் ரஹ்மான் அவர்களின் நிலத்திற்கு வடக்கே, திரு. கிருஷ்ணன் அவர்களின் நிலத்திற்கு மேற்கே, பொது சாலை, டாக்டர். பாஷா மற்றும் பிற நபர்களின் நிலத்திற்கு கிழக்கே, இதில் தாக்கு 1 நிலத்தின் அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில்: 38 3/4 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில் : 41 ½ அடி, தெற்கு வடக்காக கிழக்கு பகுதியில் : 62 1/4 அடி, தெற்கு வடக்காக மேற்கு பகுதியில் : 72 ½ அடி. மொத்த பரப்பளவு 2703 ½ சதுரடி அல்லது 251.16 சதுர மீட்டர் நிலம். தாக்கு 2 நிலத்தின் அளவுகள் : கிழக்கு மேற்காக 20 அடி, தெற்கு வடக்காக 7 ½ அடி, மொத்தம் சேர்த்து 150 அடி அல்லது 13.94 சதுர மீட்டர். தாக்கு1 மற்றும் 2 சேர்த்து மொத்த பரப்பளவு 2853 ½ சதுரடி நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள RCC கட்டிடம். இந்த சொத்து கிருஷ்ணாபுரம் கிராம பஞ்சாயத்து எல்லை மற்றும் தருமபுரி யூனியன் கவுன்சிலுக்கு உட்பட்டது.

குறைந்தபட்ச விலை: ரூ. 31,67,040/-	முன்வைப்பு தொகை: ரூ. 3,16,704/-	ஏல உயர்வு தொகை: ரூ. 10,000/-

பணம் செலுத்தும் முறை: அனைத்து தொகைகளும், **இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்** என்ற பெயரில் கேட்பு காசோலையாக **சென்னை செலுத்தகூடிய வகையில்** அல்லது கீழ் குறிப்பிட்டுள்ள கணக்கு எண்களில் RTGS / NEFT மூலமாக செலுத்த வேண்டும். **a) கணக்கின் பெயர் : இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் b) வங்கியின் பெயர்: HDFC, c) கணக்கு எண். HHFLTDTNSLMHSURA046, d) IFSC குறியீடு: HDFC0004989.**

முத்திரையிட்ட உறைகள் "Bid for participating in E-Auction Sale - in the **Loan Account No. TN/SLM/HSUR/A000000046** (மேற் குறிப்பிட்டுள்ளபடி) for property of **"Mrs. Pushpa P W/o Mr. Palani"**.

வ.எண்.2: கடன்தாரர்(கள்) / இணைகடன்தாரர் (கள்) / ஜாமீன்தாரர் (கள்) : கடன்தாரர்: 1. திரு. ஜீவானந்தம் T.M காலஞ்சென்றவர் **2.திருமதி. சுமதி,** க/பெ. ஜீவானந்தம் T.M, **3. திரு. மஞ்சுநாத்,** த/பெ. ஜீவானந்தம் T.M, **4.திருமதி. பூர்ணிமா,** த/பெ. ஜீவானந்தம் T.M. **5.திருமதி. கோகிலா,** த/பெ. ஜீவானந்தம் T.M. **6. திரு. புருஷோத்தமன்** த/பெ. ஜீவானந்தம் T.M. **(வ.எண். 2 முதல் 6 வரை காலஞ்சென்ற ஜீவானந்தம்T.M. அவர்களின் சட்ட வாரிசுகள்) இணைகடன்தாரர் : 7. திருமதி. சுமதி,** க/பெ. ஜீவானந்தம் T.M. **அனைவரின் முகவரி:** 72-B, குப்பநாயக்கனூர், கோகுப்பட்டி, மாரியம்மன் கோவில், சேலம் - 636 305. **கேட்பு அறிவிப்பு தேதி மற்றும் தொகை: 11.10.2021 & ரூ.45,48,987/- அடையாளபூர்வ சுவாதீன தேதி: 18.05.2022, மொத்த நிலுவை தொகை: 31.10.2022 அன்று வரை ரூ.43,60,479/-**

அசையா சொத்துக்களின் விவரங்கள் : **பத்திர எண். 1271/2006-ன் படி** சேலம் மேற்கு பதிவு மாவட்டம், மேச்சேரி துணை பதிவு அலுவலகம், அமணி கொங்குப்பட்டி வடக்கு கிராமம், சர்வே எண்.516/1A2D, வருவாய் பதிவேட்டின் படி 516/1A2D1-ன் படி 2623 சதுர அடி நிலம். மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : சர்வே எண். 516/1A2D-ன் படி கிழக்கு மேற்கான 10 அடி அகல சாலைக்கு: வடக்கே, குப்புசாமி நிலத்திற்கு: தெற்கே, சிவசண்முகம் நிலத்திற்கு: கிழக்கே, மாணிக்கம் நிலத்திற்கு: மேற்கே. அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்கில் : 43 அடி, கிழக்கு மேற்காக தெற்கில் : 43அடி, தெற்கு வடக்காக கிழக்கில் : 61 அடி, தெற்கு வடக்காக மேற்கில் : 61 அடி. மொத்தம் 2623 சதுர அடி.

குறைந்தபட்ச விலை: ரூ. 53,46,520/-	முன்வைப்பு தொகை: ரூ. 5,34,652/-	ஏல உயர்வு தொகை: ரூ. 10,000/-

பணம் செலுத்தும் முறை: அனைத்து தொகைகளும், **இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்** என்ற பெயரில் கேட்பு காசோலையாக **சென்னை செலுத்தகூடிய வகையில்** அல்லது கீழ் குறிப்பிட்டுள்ள கணக்கு எண்களில் RTGS / NEFT மூலமாக செலுத்த வேண்டும். **a) கணக்கின் பெயர் : இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் b) வங்கியின் பெயர்: HDFC, c) கணக்கு எண். HHFLTDTNSLMSALMA099, d) IFSC குறியீடு: HDFC0004989.**

முத்திரையிட்ட உறைகள் "Bid for participating in E-Auction Sale - in the **Loan Account No.TN/SLM/SALM/A000000099** (மேற் குறிப்பிட்டுள்ளபடி) for property of **"Mr.Jeevanadam.T.M S/o Murugesen"**.

சொத்துக்களை பார்வையிடும் தேதி & நேரம்	20.10.2022 காலை 11.00 முதல் பிற்பகல் - 2.00 மணி வரை
முன்வைப்பு தொகை செலுத்த கடைசி தேதி	11.11.2022 மாலை 5.00 மணி வரை
மின் ஏல தேதி & நேரம்	15.11.2022 காலை 11.00 முதல் பிற்பகல் - 1.00 மணி வரை

ஆன்லைன் மின் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. இந்த சொத்து **"எங்கு எப்படி உள்ளதோ மற்றும் அங்கு அப்படி அதே நிலையில்"** & பொறுப்பேற்காத அடிப்படை **இல்லாமல்** விற்கப்படும். இந்த விற்பனை எந்த விதமான உத்தரவாதங்கள் மற்றும் இழப்பீடுகள் இல்லாமல் உள்ளது.
2. சொத்து / சொத்துக்களின் விவரங்கள் (அதாவது மின்-ஏல விற்பனை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அளவு மற்றும் அளவீடுகள் ஈட்டுக்கடன் அளித்தவரின் சிறந்த தகவல்களுக்குக் கூறப்பட்டுள்ளது மற்றும் ஈட்டுக்கடன் அளித்தவரின் எந்தப் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபட்ட தற்குப் பதிலளிக்க முடியாது. அசல் பரப்பளவு மற்றும் அளவுகள் வேறுபடலாம்.
3. ஈட்டுக்கடன் அளித்தவரால் வெளியிடப்பட்ட இந்த மின்-ஏல விற்பனை அறிவிப்பு, பொது மக்கள் தங்களது விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கான அழைப்பாகும், மேலும் இது ஈட்டுக்கடன் அளித்தவரின் தரப்பில் எந்த அர்ப்பணிப்பு அல்லது பிரதிநிதித்துவத்தையும் ஏற்படுத்தாது. விருப்பமுள்ள விலைப்புள்ளிதாரர்கள் ஈட்டுக்கடன் அளித்தவரிடம் உள்ள உரிமை பத்திரங்களின் நகல்களைப் பார்க்கவும், விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கு முன், சொத்தின் மூலப்பத்திரங்கள் மற்றும் தற்போதைய நிலை மற்றும் உரிமைகோரல்கள் / நிலுவைத் தொகைகள் பற்றி சொந்த விசாரணைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.
4. ஏலம் / விலைப்புள்ளிகள் **https://www.bankauctions.in** என்ற இணையதளத்தின் மூலம் "ஆன்லைன் எலக்ட்ரானிக் முறை" மூலமாக மட்டுமே மேற்கொள்ளப்படும் அல்லது சேவை அளிப்பவரான M/s 4 Closure நிறுவனத்தால் மின் ஏல தளம் மூலம், ஏலத்தின் முழு செயல்முறையையும் ஏற்பாடு செய்து ஒருங்கிணைக்கும்.
5. விலைப்புள்ளிதாரர்கள் தாங்கள் விரும்பும் இடத்திலிருந்து ஏலம் எடுப்பதற்காக மின்-ஏலத்தில் பங்கேற்கலாம். இணைய இணைப்பு விலைப்புள்ளிதாரர் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும். இணைய இணைப்பு, நெட்வொர்க் சிக்கல்கள், சொந்த கணினி செயலிழப்பு, மின் செயலிழப்பு போன்றவற்றுக்கு ஈட்டுக்கடன் அளித்தவர் / சேவை அளிப்பவர் பொறுப்பேற்க மாட்டார்கள்.
6. விருப்பம் உள்ள விலைப்புள்ளிதாரர்கள் மின்-ஏலம் பற்றிய விவரங்கள், உதவி, நடைமுறை மற்றும் ஆன்லைன் ஏலத்திற்கு சேவை அளிப்பவரான **M/s. 4 Closure, 605A, வேது தளம், மைத்ரிவனம் கமர்ஷியல் காம்ப்ளக்ஸ், அமீர்பேட், ஹைதராபாத் - 500 038 (தொடர்புக்கு: திரு.பாரதி ராஜூ கைபேசி: 8142000735, திரு.சுப்பாராவ் கைபேசி: 8142000061) மின்னஞ்சல்:** subbarao@bankauctions.in, bharathi@bankauctions.in-ல் தொடர்பு கொள்ளவும். மின் ஏல விற்பனையில் பங்கேற்க விரும்பும் விலைப்புள்ளிதாரர்கள் தங்கள் பெயரை **https://www.bankauctions.in** -இல் முன்கூட்டியே பதிவு செய்து உபயோகிப்பாளர் முகவரி மற்றும் கடவுச்சொல்லைப் பெற வேண்டும். விலைப்புள்ளிதாரர்கள் சேவை அளிப்பவரிடமிருந்து கடவுச்சொல்லைப் பெற்றவுடன் உடனடியாக அதை மாற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
7. மின் ஏலத்தில் பங்கேற்பதற்காக, ஏலம் எடுக்க விரும்பும் விலைப்புள்ளிதாரர்கள் 10% குறைந்தபட்ச விலையில் (மேற் குறிப்பிட்டுள்ளபடி) திரும்பப்பெறக்கூடிய முன்வைப்புத் தொகையை (EMD) செலுத்த வேண்டும். விருப்பமுள்ள விலைப்புள்ளிதாரர்கள் கேட்பு காசோலை / NEFT / RTGS மூலம் **"இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்" 11.11.2022** (வெள்ளிகிழமை) அன்று அல்லது அதற்கு முன் செலுத்த வேண்டும்.
8. ஏலம் எடுக்க விரும்பும் விலைப்புள்ளிதாரர்கள் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட ஏலப் படிவத்தை (அதன் வடிவம் https://www.bankauctions.in-இல் கிடைக்கும்) மற்றும் EMD-க்கு அனுப்பும் டிமாண்ட் டிராப்ட் உடன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, HHF **அலுவலக முகவரி : 1-வது தளம், 1/5, சாந்தி பிளாசா, பிருந்தாவன் சாலை, பேர்லேண்ட்ஸ், பொன்னுசாமி கவுண்டர் மண்டபம் எதிரில், சேலம் - 636 004** என்ற பிராந்திய அலுவலகத்திற்கு முத்திரையிடப்பட்ட உறையில் **11.11.2022** (வெள்ளிக்கிழமை) அன்று அல்லது அதற்கு முன்பு மாலை 3.00 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
9. முன்வைப்பு தொகையுடன் ஏலம் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி முடிந்த பிறகு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவரால் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை பரிசோதித்து, தகுதியான விலைப்புள்ளிதாரர்களின் விவரங்களை உறுதிப்படுத்த வேண்டும் (குறைந்தபட்ச விலைக்கு மேல் தங்கள் விலைப்புள்ளிகளை மேற்கோள் காட்டி, குறிப்பிட்ட EMD செலுத்தியவர்கள் மின் ஏல விற்பனை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி மற்றும் நேரத்தில் ஆன்லைன் Inter-se ஏலம் / ஏல நடவடிக்கைகளில் பங்கேற்க விலைப்புள்ளிதாரர்களை மட்டுமே அனுமதிக்கும் வகையில், ஈட்டுக்கடன் அளித்தவர் M/s. 4 Closure என்ற சேவை அளிப்பவருக்கு அனுப்பப்படும்.
10. தகுதி வாய்ந்த விலைப்புள்ளிதாரர்களுக்கு இடையேயான ஏலம், தகுதிவாய்ந்த விலைப்புள்ளிதாரர்களால் மேற்கோள் காட்டப்பட்ட அதிக விலைப்புள்ளியிலிருந்து தொடங்கும். இடை-செயல் ஏலத்தின் போது, ஒவ்வொன்றும் 10 நிமிடங்களுக்கு வரம்பற்ற நீட்டிப்பு இருக்கும், அதாவது கடைசி நீட்டிப்பிலிருந்து 10 நிமிடங்களுக்குள் ஏலம் எடுக்கப்பட்டால், ஒவ்வொரு முறையும் ஏலத்தின் இறுதி நேரம் தானாகவே 10 நிமிடங்கள் நீட்டிக்கப்படும்.
11. ஒருமுறை செய்யப்பட்ட ஏலங்கள் ரத்து செய்யப்படவோ அல்லது திரும்பப் பெறப்படவோ கூடாது. விலைப்புள்ளிதாரர்களுக்கு வழங்கப்பட்ட உபயோகிப்பாளர் முகவரியிலிருந்து செய்யப்படும் அனைத்து ஏலங்களும் அவர் மட்டுமே செய்ததாகக் கருதப்படும்.
12. மின் ஏல செயல்முறைகள் முடிவடைந்தவுடன், அதிக விலைகோரிய விலைப்புள்ளிதாரர், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி **திரு.செந்தில்.P (RLM), அலுவலக முகவரி : 1-வது தளம், 1/5, சாந்தி பிளாசா, பிருந்தாவன் சாலை, பேர்லேண்ட்ஸ், பொன்னுசாமி கவுண்டர் மண்டபம் எதிரில், சேலம் - 636 004.** மற்றும் சேவை அளிப்பவர் ஆகிய இருவருக்கும் மின்னஞ்சல் மூலம் அவர் மேற்கோள் காட்டிய அதிகபட்ச விலைப்புள்ளியின் இறுதித் தொகையை உறுதிப்படுத்த வேண்டும்.
13. வெற்றிபெற்ற விலைப்புள்ளிதாரர் பெயருக்கு உறுதிசெய்யப்பட்டவுடன் 25% தொகையை உடனடியாக (முன்வைப்பு தொகை உட்பட) செலுத்த வேண்டும் மற்றும் மீதம் உள்ள 75% தொகையை விற்பனை செய்யப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கேட்பு காசோலை / வரைவோலை / NEFT / RTGS / காசோலை மூலமாக **இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்,** என்ற பெயருக்கு செலுத்த வேண்டும்.
14. வெற்றிபெற்ற விலைப்புள்ளிதாரர் / ஏலத்தில் வாங்குபவர் குறிப்பிட்ட காலகெடுவிற்குள் மேற்குறிப்பிட்ட தொகையை செலுத்த தவறினால், விற்பனை ரத்து செய்யப்பட்டு, ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகை (முன்வைப்பு தொகை உட்பட) பறிமுதல் செய்யப்பட்டு, சொத்து மீண்டும் விற்பனை செய்யப்படும்.
15. வெற்றிபெற்ற விலைப்புள்ளிதாரர் கோரிக்கையின் பேரில், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி தனது முழுமையான விருப்பத்தின் பேரில், ஏலத் தொகையின் மீதமுள்ள தொகையை செலுத்துவதற்கு எழுத்துப்பூர்வமாக மேலும் கால அவகாசம் வழங்கலாம்.
16. வெற்றிபெற்ற விலைப்புள்ளிதாரர் விற்பனை விலையில் 1% TDS க்கு (விற்பனை வருமானத்தில்) செலுத்தி, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் TDS சான்றிதழைச் சமர்ப்பித்து, விற்பனை விலையின் முழுத் தொகையையும் (TDS க்கு 1% கழித்த பிறகு) செலுத்த வேண்டும். அங்கீகாரம் பெற்ற அதிகாரியின் சலுகையை ஏற்றுக்கொண்ட 15 வேலை நாட்களுக்குள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் பொருத்தமாக கருதப்படும் பிற நீட்டிக்கப்பட்ட காலத்திற்குள் செலுத்த தவறினால் முன் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.
17. நகராட்சி / பஞ்சாயத்து வரிகள், மின்சார பாக்கிகள் (ஏதேனும் இருந்தால்) மற்றும் வேறு ஏதேனும் பிற குழுமங்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகள் (ஏதேனும் இருந்தால்) விற்பனைச் சான்றிதழை வழங்குவதற்கு முன் வெற்றிபெற்ற விலைப்புள்ளிதாரரால் செலுத்தப்பட வேண்டும். சொத்து தொடர்பான அனைத்து சட்டப்பூர்வ பாக்கிகளையும் கருத்தில் கொண்டு ஏலம் எடுக்க வேண்டும்.
18. முழு கொள்முதல் விலை / ஏலத் தொகை மற்றும் அனைத்து வரிகள் / கட்டணங்கள் செலுத்துவது தொடர்பாக தேவையான ஆதாரத்தை அளித்தால் மட்டுமே வெற்றிபெற்ற விலைப்புள்ளிதாரர் பெயருக்கு விற்பனைச் சான்றிதழ் வழங்கப்படும்.
19. பொருந்தக்கூடிய சட்ட செலவுகள் முத்திரைக் கட்டணம், பதிவுக் கட்டணங்கள் மற்றும் பிற தற்செயலான கட்டணங்களை வெற்றி பெற்ற விலைப்புள்ளிதாரர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
20. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி எந்த காரணமும் தெரிவிக்காமல் மின்-ஏல விற்பனை நடவடிக்கைகளை ஒத்திவைக்கலாம் / ரத்து செய்யலாம். இந்த மின் ஏல விற்பனையானது, திட்டமிட்ட விற்பனைத் தேதியிலிருந்து 30 நாட்களுக்கு முன்னதாக ஒத்திவைக்கப்பட்டால், அது சேவை அளிப்பவரின் இணையதளத்தில் தெரிவிக்கப்படும்.
21. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் முடிவே இறுதியானது, பிணைப்பு மற்றும் சந்தேகத்திற்கு இடமில்லாதது.
22. விலைப்புள்ளிகளை சமர்ப்பித்த பிறகு அனைத்து விலைப்புள்ளிதாரர்களும் மின் ஏல விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் படித்து புரிந்து கொண்டவர்களாகக் கருதப்படுவார்கள், மேலும் அவற்றிற்குக் கட்டுப்பட்டவர்கள் ஆவார்கள்.
23. **மேலும் விவரங்கள் மற்றும் ஏதேனும் தேவைப்படின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், திரு.செந்தில் .P (RLM) அவர்களை கைபேசி எண். 9629295543 தொடர்பு கொள்ளவும்.**
24. உரிமை அமலாக்க சட்டம் 2002 விதி 9(6)-ன்படி மேற்குறிப்பிட்ட கடன் கணக்கின் கடன்தாரர் / அடமானதாரர் / ஜாமீன்தாரர் ஆகியோர்களுக்கு மேற்குறிப்பிட்ட தேதி / இடத்தில் நடைபெற உள்ள ஏல விற்பனையை நிறுத்துவதற்கான 30 (முப்பது) நாட்கள் அறிவிப்பு என இந்த விளம்பரம் கருதப்படும்.

கையொப்பமிட்டவர் : திரு.செந்தில் .P (RLM)
அதிகாரபூர்வ அதிகாரி
இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

இடம் : சேலம் / தர்மபுரி
தேதி : 10.10.2022

சிறப்பு வழிமுறைகள் / எச்சரிக்கை: கடைசி நிமிடங்கள்/வினாடிகளில் ஏலம் எடுப்பவர்கள் தங்கள் சொந்த நலன் கருதி விலைப்புள்ளிதாரர்களால் தவிர்க்கப்பட வேண்டும். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் விலைப்புள்ளிதாரர் தரப்பில் ஏதேனும் குறைபாடுகள் / தோல்விகள் (இணையச் செயலிழப்பு, மின் செயலிழப்பு போன்றவை) ஆகியவற்றிற்கு இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் அல்லது சேவை அளிப்பவர் பொறுப்பேற்க மாட்டார்கள். இதுபோன்ற தற்செயலான சூழ்நிலைகளைத் தடுக்க, ஏலதாரர்கள் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் / மாற்று மின்சாரம் போன்றவற்றையும் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள், மற்றும் வேறு ஏதேனும் தேவைப்படின் அதனையும் பெற்று ஏலத்தில் வெற்றிகரமாக பங்கேற்க முடியும்.

விவசாயத் தொழிலாளர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

கிருஷ்ணகிரியில் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தினர்.

தருமபுரி/கிருஷ்ணகிரி, அக். 10: தருமபுரியில் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் சார்பில், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு, ஒன்றியத் தலைவர் ஜி.ராஜகோபால் தலைமை வகித்தார். ஒன்றியச் செயலாளர் ஜி.பச்சாகவுண்டர் முன்னிலை வகித்தார். மாவட்டச் செயலாளர் ஜெ.பிரதாபன், மாவட்டத் தலைவர் ஜி.மாதையன் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

இதில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் வேலை தொடங்கும் நேரத்தை காலை 7 மணி என்பதை காலை 9 மணியாக மாற்றியமைக்க வேண்டும்.

வேலை அட்டை பெற்ற அனைவருக்கும் வேலை வழங்க வேண்டும். 60 வயது கடந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒய்வூதியம் வழங்க தனி சட்டம் இயற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இதே கோரிக்கைகளை வலியுறுத்தி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு ஒன்றிய பொறுப்பாளர் என்.முருகேசன் தலைமயில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கிருஷ்ணகிரியில்...

இதே கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் சார்பில் கிருஷ்ணகிரி புறநகர் பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு அந்த அமைப்பின் மாவட்டச் செயலாளர் இரா.சேகர் தலைமை வகித்தார். மாவட்டக் குழு உறுப்பினர் பூபதி, ஒன்றியச் செயலாளர்கள் ரஜியா பேகம், உறுப்பினர்கள் ரஜனி, மாவட்டக் குழு உறுப்பினர்கள் சக்கரவர்த்தி, சீனிவாசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோர் முழக்கங்களை எழுப்பினர்.

தினமணி HELPLINE

சந்தாதாரர்களே
உங்கள் நாளிதழை பெறுவதில் தாமதம் ஏற்பட்டால் தொடர்பு கொள்ள

04342-268202 / 8807000218

or type CRM DPR to 56161
என்கிற எண்ணுக்கு SMS செய்யவும்

தினமணி

எமது செய்தியாளர்களை தொடர்பு கொள்ள...

தருமபுரி	99523 48226
அரூர்	94436 19137
கிருஷ்ணகிரி	97866 70077
ஊத்தங்கரை	95438 12474
ஒசூர்	9443041404
பென்னாகரம்	90956 56769

மதுவிற்பனையை கட்டுப்படுத்தக் கோரி சாலை மறியல்

அரூர், அக். 10: நவலையில் அனுமதியின்றி மது விற்பனை செய்வதை கட்டுப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி பொதுமக்கள் திங்கள்கிழமை மறியலில் ஈடுபட்டனர்.

தருமபுரி மாவட்டம், மொரப்பூரை அடுத்த நவலை கிராமத்தில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. இந்தக் கிராமத்தில் அனுமதியின்றி மதுப்புட்டிகள் விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது. மது குடித்தவர்களால் ஏற்படும் பிரச்னையால் நாள்தோறும் பள்ளி, கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் பாதிக்கப்படுவதாக புகார் தெரிவித்து, நவலை பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள், பள்ளி மாணவர்கள், மொரப்பூர் - காரிமங்கலம் சாலையில் மறியலில் ஈடுபட்டனர். அப்போது நவலை மற்றும் சுற்று வட்டாரப் பகுதியில் அரசு அனுமதியின்றி மதுப்புட்டிகள் விற்பனை செய்வதை கட்டுப்படுத்த வேண்டும் என வலியுறுத்தினர்.

இது குறித்து தகவல் அறிந்து வந்த அரசு அதிகாரிகள், காவல் துறையினர் பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, மதுப்புட்டிகள் விற்பனை செய்வதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் அளித்த உறுதியின்பேரில் கிராம மக்கள் சாலை மறியல் போராட்டத்தைக் கைவிட்டனர். இந்த சாலை மறியல் காரணமாக மொரப்பூர்–காரிமங்கலம் சாலையில் சுமார் ஒரு மணி நேரம் வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

Oushadhi
The Pharmaceutical Corporation (I.M.) Kerala Ltd.
(A Govt. of Kerala Undertaking)
Kuttanellur, Thrissur-14, Kerala
Ph: 0487- 2459841, 2459807.
E-mail : purchase@oushadhi.org

P/172/2022-23 Date: 11.10.2022

RE-TENDER NOTICE

Re-E-Tenders & Re-Tenders are invited for the supply of I) Raw Materials and II) Containers & Packing Materials for the period **15th November 2022 to 31st March 2023**. Last date of submission of both Tenders: **27.10.2022**. Re-E-Tenders can be downloaded from the website **www.etenders.kerala.gov.in** & Re-Tenders from **www.oushadhitender.com**. For more details, please visit our website **www.oushadhi.org** or contact our Purchase Division at Kuttanellur.

Thrissur (Sd/-) Managing Director

அசல் நிலம் / சொத்து ஆவணம் காணவில்லை

தருமபுரி (மா), பாப்பிரெட்டிப்பட்டி (வ), கடத்தூர், இந்திரா நகர் முகவரியில் வசித்து வரும் கோவிந்தசாமி அவர்களின் மனைவி (ஆதார் எண்.1234 1234 1234), சுமார் 45 வயதுடைய நான், வேல்மணி.G, இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்வது யாதெனில்: கடத்தூர் சார்பதிவகத்தில் கிரையம் மூலம் பதிவு செய்யப்பட்ட எனக்கு சொந்தமான அசையா சொத்தினை (ஆவணம் எண்.1251/2008, பதிவு நாள்:13.11.2008) விற்கும் பொருட்டு நில புரோக்கரை சந்திக்க கடந்த 31.07.2022 அன்று சின்னாங்குப்பம் A.M.S.பள்ளி அருகில் சென்ற போது மேற்கண்ட அசல் ஆவணம் தொலைந்து விட்டது. இதனை யாரேனும் கண்டுபிடித்தால் எனது 95248 61854 கைப்பேசி எண்ணிற்கு அல்லது கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வேல்மணி. G, க/பெ.கோவிந்தசாமி, இந்திரா நகர், கடத்தூர், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், தருமபுரி மாவட்டம்-635303

அசல் நிலம் / சொத்து ஆவணம் காணவில்லை

No.28 Mullur Road, Opp.Little Milliennium Preschool, Mullur, Carmelaram (P), Varthur (H), Bengaluru City, Karnataka. முகவரியில் வசித்து வரும் திரு.கொண்டாரெட்டி அவர்களின் மகன் முனிசாமிரெட்டி ஆதார் அட்டை எண்.5780 5744 5889 சுமார் 80 வயதுடைய நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்வது யாதெனில், ஒசூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம் பதிவு செய்யப்பட்ட எனக்கு சொந்தமான அசையா சொத்தின் மூல **ஆவணம் எண்.3261** தேதி 1961 தொலைந்து விட்டது. யாரேனும் அதனைக்கண்டுபிடித்தால், எனது 9008333156 கைப்பேசி எண்ணிற்கு அல்லது கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

No.28 Mullur Road, Opp.Little Milliennium Preschool, Mullur, Carmelaram (P), Varthur (H), Bengaluru City, Karnataka.

அறிவிப்பு

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், செம்மண்டப்பட்டி கிராமம், மோட்டூர், எண்: **5/71C** என்ற முகவரியில் வசித்து வரும் **M/s.**ராயல் மைன்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் பொதுமக்களுக்கு தெரிவிப்பதாவது.

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டம், பட்லப்பள்ளி கிராமம் பட்டா நிலம் புல எண். **792/1,792/2 & 798/2B, 2.32.0Ha** பரப்புள்ள சாதாரண கற்கள் மற்றும் கிராவல் வெட்டி எடுக்க குவாரி குத்தகை வழங்கப்பட்டுள்ளது. தொடர்பாக மாநில சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு ஆணையம் தனது கடித எண்.**Lr.No.SEIAATN/F.No.8791/EC.No:5215/2022, Dated:18.08.2022**–ல் அனுமதி வழங்கி உள்ளது என்பதை இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். இக்கடிதத்தினை **http://seiaa.tn.gov.in** என்ற வலைதளத்திலும் காணலாம்.

உரிமையாளர்,
M/s.ராயல் மைன்ஸ்

இடம்: கிருஷ்ணகிரி

பழங்குடியின மக்களின் உரிமைகளை அரசு உறுதிப்படுத்த வேண்டும்: ந.நஞ்சப்பன்

பென்னாகரம், அக். 10: தமிழகத்தில் வனப் பகுதிகளில் வசிக்கும் பழங்குடியின மக்களின் உரிமைகளை தமிழக அரசு உறுதிப்படுத்த வேண்டும் என பழங்குடியின மக்கள் சங்கத்தின் சிறப்புத் தலைவர் ந. நஞ்சப்பன் தெரிவித்தார்.

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லில் தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் மாநிலக் குழு கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பென்னாகரம் முன்னாள் எம்எல்ஏவும், பழங்குடி இன மக்கள் சங்கத்தின் சிறப்புத் தலைவருமான ந.நஞ்சப்பன் கலந்து கொண்டார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

ஒகேனக்கல்லில் நடைபெற்ற தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்க மாநிலக் குழு கூட்டத்தில் பேசும் முன்னாள் எம்எல்ஏ ந.நஞ்சப்பன், நிர்வாகிகள்.

தருமபுரி மாவட்டத்தில் பென்னாகரம், பாலக்கோடு மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் பரவலாக பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். பழங்குடியின மக்களை காடுகளை விட்டு வெளியேற்ற வனத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. எவ்வித மாற்று ஏற்பாடுகள் செய்யாமல் வனப்பகுதிகளில் இருந்து பழங்குடியின மக்களை வெளியேற்றுவது ஏற்புடையதல்ல.

ஒகேனக்கல் வனப்பகுதி, பண்ணப்பட்டி பகுதியில் வசிக்கும் இருளர் இன மக்கள் காட்டில் நுழையக் கூடாது என வனத்துறையினர் வேலி அமைத்துள்ளனர். இதுகுறித்து வனத்துறையின் அதிகாரிகளிடம் பலமுறை தெரிவித்தும் அகற்றாமல் உள்ளனர். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வசித்து வரும் பழங்குடியின மக்களுக்கு 89 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பட்டாக்களை வழங்கக் கோரியும், பழங்குடியின மக்களை வனப் பகுதியில் இருந்து வெளியேற்றக் கூடாது என்பதனை வலியுறுத்தியும் வரும் டிசம்பர் 5ஆம் தேதி மாநிலம் முழுவதும் போராட்டம் நடத்தப்பட உள்ளது.

பழங்குடியின மக்கள் சங்கத்தின் மாநில மாநாடு மார்ச் மாதம் நடைபெற உள்ளதால் அதில் பங்கேற்குமாறு தமிழக முதல்வருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றார்.

முன்னதாக நடைபெற்ற மாநிலக் குழுக் கூட்டத்தில் பழங்குடியின மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர வேண்டும், பழங்குடியினர் மற்றும் இருளர் இன மக்களுக்கு வட்டாட்சியரே ஜாதிச் சான்றிதழ் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக் கூட்டத்தில் மாநில பொருளாளர் கடம்பூர் ராமசாமி, மாநிலத் துணைத் தலைவர் கிருஷ்ணன் குட்டி, மாவட்ட பொறுப்பாளர் எம்.ஏ.காதர், மாநிலக் குழு உறுப்பினர்கள் அண்ணாதுரை ,தொட்டன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர்கள் எம் மாதேஸ்வரன், மாவட்ட செயலாளர் வழக்குரைஞர் கலைச்செல்வன், நிர்வாகி சி.விஸ்வநாதன் மற்றும் மாநிலக் குழு உறுப்பினர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அசல் நிலம் / சொத்து ஆவணம் காணவில்லை

க.எண்.202, வீரராகவபுரம், ராணிமூக்கனூர், சிங்கிரிஹள்ளி, கடத்தூர், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், தருமபுரி மாவட்டம். முகவரியில் வசித்து வரும் திரு.வரதராஜ் மகன் சீனிவாசன் (ஆதார் எண். 2017 6630 5758) சுமார் 46 வயதுடைய நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்வது யாதெனில், தருமபுரி இணை–II சார்பதிவாளர் அலுவலகத்தில் 28.11.1994 பதிவு செய்யப்பட்ட எனக்கு சொந்தமான அசையா சொத்தின் மூல **ஆவண எண்.209/1994** 02.08.2022 தேதி அன்று தருமபுரி பஸ் நிலையத்தில் தொலைந்துவிட்டது. அதனைக் கண்டுபிடித்தால், எனது செல் 9585615757 எண்ணிற்கு அல்லது கீழ்கண்ட முகவரிக்கு தொடர்புக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சீனிவாசன் த/பெ வரதராஜ், க.எண்.202, வீரராகவபுரம், ராணிமூக்கனூர், சிங்கிரிஹள்ளி, கடத்தூர், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், தருமபுரி மாவட்டம்

ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் லிமிடெட்
நகை ஏல அறிவிப்பு

எங்கள் நிறுவனத்தில் 12 மாதத்தவணை 31.07.2021, 9 மாதத்தவணை 31.10.2021, 6 மாதத்தவணை 31.01.2022, 3 மாதத்தவணை 31.01.2022 வரை ஈடு வைக்கப்பட்டு காலவரையரை முடிந்தும் திருப்பப்படாத நகைகள் கெடு முடிவடைந்துள்ளது. மேற்படி நகைக் கடன்களுக்கு உரிய கடன்தாரர்களுக்கு சாதாரண தபால் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற ஏலதாரர் மூலமாக பதிவு தபால் அனுப்பியும் ஈடு வைக்கப்பட்டுள்ள நகைகளை மீட்கவோ அல்லது கடன்களை புதுப்பிக்கவோ இல்லை, அதனால் சம்பந்தப்பட்ட கடன்களுக்கு உரிய ஈடு வைக்கப்பட்ட நகைகளை நிறுவனத்தின் விதிப்படி கீழ்க்கண்ட விவரப்படி ஏலம் விடப்படும். நகை அடகு வைத்தவர் இறந்திருந்தாலும், வெளியூர் சென்றிருந்தாலும் இந்த அறிவிப்பு அவர்கள் வாரிசுக்கும் பொருந்தும். பதிவு தபால் கிடைக்கப் பெறாதவர்களுக்கும் மற்றும் முகவரி மாற்றம் செய்தவர்களுக்கும் இந்த அறிவிப்பு பொருந்தும். ஏலத்திற்கு வரும் பாக்கெட்டுகளில் குறிப்பிட்ட பாக்கெட்டுகளை ஏலம் விடாமல் நிறுத்தி வைப்பதற்கும் மேலும் வேறு தேதியில், வேறு இடத்தில் ஏலத்தை நடத்தவும் நிறுவனத்திற்கு உரிமை உண்டு.

ஏலம் நடைபெறும் இடம்: **ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் லிமிடெட்,** DSR காம்ப்ளெக்ஸ், சேலம் மெயின் ரோடு, பாரதிபுரம், தர்மபுரி – 636 705.

ஏல தேதி	நேரம்	நகை ஈடு வைக்கப்பட்டுள்ள கிளைகள்	நகையை மீட்க கடைசி தேதி
20.10.2022	காலை 11.00 மணி	ஒசூர்–I&II, கிருஷ்ணகிரி–I, தர்மபுரி–I&II, ஆத்தூர்–II, தேன்கனிக்கோட்டை, அரூர், பென்னாகரம், பாலக்கோடு, ஊத்தங்கரை, வாழப்பாடி, பர்கூர், தம்மம்பட்டி.	19.10.2022

கடன் பெற்றவர் கடன் எண், பெயர், விலாசம், நகைகளின் விபரம், நகை ஈடு வைத்த கிளையின் அறிவிப்பு பலகையில் காணலாம். விளம்பர செலவு தனியே வசூல் செய்யப்படும். முன் அறிவிப்பு இன்றி ஏலத்தை ரத்து செய்யவோ அல்லது ஏல தேதியை மாற்றி வைக்கவோ நிறுவனத்திற்கு உரிமை உண்டு. மேற்கண்ட நகைகளை அடகு வைத்தவர் மேற்கூறிய தேதி மாலை 3.00 மணிக்குள் **அசல், வட்டி, ஏலச் செலவு மற்றும் விளம்பரச் செலவுகளை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். ரூ.1,00,000 (ரூபாய் ஒரு இலட்சம்) டெபாசிட் தொகை** கட்டியவர்கள் மட்டும் ஏலத்தில் கலந்து கொள்ளலாம். ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் பான் கார்டு மற்றும் அட்ரஸ் புரூப் கொடுக்க வேண்டும்.

ஏலதாரர்
குருசாந்தி
சைதாப்பேட்டை, சென்னை–15

இப்படிக்கு
துணைப்பொது மேலாளர் (நகைக்கடன்)
அடையாறு, சென்னை–20.

பிணையில் வந்த இளைஞரை கொலை செய்த வழக்கில் 8 பேர் கைது

ஒசூர்,அக். 10: ஒசூரில் பிணையில் வந்த இளைஞர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட வழக்கில் 8 பேரை போலீஸார் கைது செய்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர், அந்திவாடியைச் சேர்ந்தவர் முரளி (20). தொழிலாளி. இவரது மனைவி நந்தினி (20). இவர்கள் ஓராண்டுக்கு முன் காதலித்து திருமணம் செய்து கொண்டனர். ஞாயிற்றுக்கிழமை வீட்டில் இருந்த முரளியை சிலர் காரில் அழைத்துச் சென்றனர். இதையடுத்து அவர் பெத்தகொள்ளு எனுமிடத்தில் வெட்டிக் கொலை செய்யப்பட்டு கிடந்தார்.

இந்தக் கொலை தொடர்பாக ஒசூர் அட்கோ போலீஸார் விசாரணை நடத்தினர். இதில் ஒசூர், அந்திவாடியைச் சேர்ந்த நிலம் மற்றும் வட்டி தொழில் செய்து வந்த உதயகுமார் (32) கடந்த 28.2.2022 அன்று வெட்டிக் கொலை செய்யப்பட்ட வழக்கில் முரளியை கைது செய்தனர். அந்த வழக்கில் அவர் முதலாவது குற்றவாளியாக சேர்க்கப்பட்டிருந்தார்.

சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த முரளி பிணையில் வெளியே வந்தார். இந்த நிலையில் முரளியை உதயகுமார் கொலைக்கு பழி வாங்குவதற்காக அவரது தம்பி சரவணன் தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து கொலை செய்தது தெரிய வந்தது.

இந்தக் கொலையில் தொடர்புடைய ஒசூர், அந்திவாடியைச் சேர்ந்த நாகராஜ் மகன் சரவணன் (31), ஒன்னுப்பள்ளி மாதேஷ் (28), கொரட்டகிரி ரகு (21), தொட்டபிளி முத்திரை நவீன்குமார் (21), திம்மசந்திரம் மதன்குமார் (25), குருப்பட்டி நவீன்குமார் (20), மிடிகிரிப்பள்ளி சுனில் (29), பரத் (27) ஆகிய 8 பேரையும் போலீஸார் திங்கள்கிழமை கைது செய்தனர். கைதானவர்களிடம் இருந்து 4 வீச்சரிவாள்கள், 2 இரு சக்கர வாகனங்களை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

ஜார்க்கண்ட் மாநில பெண் பணியாளர்களை திரும்பி அனுப்பக் கோரி மனு

கிருஷ்ணகிரி, அக். 10: ஜார்க்கண்ட் மாநிலத்தில் இருந்து தனியார் நிறுவனத்தில் பணியாற்ற அழைத்து வரப்பட்ட 860 பெண் பணியாளர்களைத் திரும்பி அனுப்ப வேண்டும் என பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் திங்கள்கிழமை மனு அளித்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் வாராந்திர மக்கள் குறைதீர் கூட்டம், மாவட்ட ஆட்சியர் வி.ஜெயசந்திரபானு ரெட்டி தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தமிழ் தேசிய பேரியக்கம் சார்பில் அதன் தலைமை செயற்குழு உறுப்பினர் மாரிமுத்து தலைமையில் 50-க்கும் மேற்பட்டோர், மாவட்ட ஆட்சியரிடம் அளித்த கோரிக்கை மனுவின் விவரம்:

கெலமங்கலம் பகுதியில் தனியார் நிறுவனம் தொடங்கப்பட்டு, கைப்பேசிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்தத் தொழிற்சாலை மூலம் 18 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என அறிவிக்கப்பட்டு, தற்போது 5 ஆயிரம் பேருக்கு மட்டுமே வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் அண்மையில் ஜார்க்கண்ட் மாநிலத்திலிருந்து சிறப்பு ரயில் மூலம் 860 பெண்கள் அழைத்து வரப்பட்டு பணி அமர்த்தப்பட்டுள்ளனர். இதனால் உள்ளூர் மக்களின் வேலைவாய்ப்பு பாதிக்கப்பட்டுள்ளது. அந்த தனியார் நிறுவனம் வெளி மாநிலத்திலிருந்து ஆள்களை அழைத்து வந்திருப்பது கண்டிக்கத்தக்கது. 860 பெண் பணியாளர்களையும் அவர்களது சொந்த மாநிலத்துக்கு திரும்பி அனுப்ப வேண்டும். உள்ளூர் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த இளம்பெண்கள், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.